12.09.2016

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### தமிழகம், புதுவையில் இடியுடன் கூடிய மழை: வானிலை ஆய்வு மையம்

**சென்னை:** வங்கக் கடலில் தென்மேற்கு திசையில் காற்றழுத்தம் உருவாகியுள்ளதால் தமிழகத்தில் 2 நாட்கள் இரவு நேரங்களில் இடியுடன் கூடிய மழை பெய்யும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.
வங்கக் கடலில் அடிக்கடி வளி மண்டல மேலடுக்கு சுழற்சியும் ஏற்பட்டு திடீர் மழை பெய்து வருகிறது. இதன் தொடர்ச்சியாக மேற்கு மத்திய வங்க கடல் மற்றும் வடமேற்கு வங்க கடல் அதையெட்டிய கடலோர பகுதியில் உருவான மேலடுக்கு சுழற்சி கீழே இறங்கி 24 மணி நேரத்தில் காற்றழுத்த தாழ்வு பகுதியாக மாறவுள்ளது.

இதன் காரணமாக தமிழகம் - புதுச்சேரியில் ஒரு சில இடங்களில் இரவில் இடியுடன் கூடிய கனமழை பெய்யும். சென்னையை பொறுத்தவரை வானம் மேக மூட்டத்துடன் காணப்படும். தமிழக கடலோரப் பகுதிகளில் மாலை, இரவு நேரங்களில் இடியுடன் கூடிய மழை பெய்யும். டெல்டா மாவட்டங்களில் ஒரு சில இடங்களில் கனமழை பெய்யும் வாய்ப்புள்ளது. 2 நாட்கள் இரவு நேரங்களில் மழை எதிர்பார்க்கலாம்.

சென்னையை பொறுத்தவரை வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். மாலை அல்லது இரவு நேரங்களில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை, ஒருசில இடங்களில் பெய்யக்கூடும். அதிகபட்ச வெப்பநிலையாக 35 டிகிரி செல்சியஸ், குறைந்தபட்ச வெப்பநிலையாக 27 டிகிரி செல்சியஸ் இருக்கக்கூடும்.

## திருமூர்த்தி அணையில் இருந்து நீர் திறக்க முதல்வர் உத்தரவு



**சென்னை:** திருமூர்த்தி அணையில் இருந்து பாசனத்துக்காக தண்ணீர் திறக்க தமிழக முதல்வர் ஜெயலலிதா உத்தரவு பிறப்பித்துள்ளார்.

இது குறித்து தமிழக அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில், திருப்பூர் மாவட்டம், திருமூர்த்தி அணையிலிருந்து பரம்பிக்குளம் ஆழியாறு திட்டத்தில், பாலாறு பழைய ஆயக்கட்டு பாசனமான தளி வாய்க்கால் பாசனம் மற்றும் பாலாறு படுகையின் இரண்டாம் மண்டலத்தில், நிலையிலுள்ள பயிர்களை காக்கும் பொருட்டு தண்ணீர் திறந்துவிடக் கோரி, தளி வாய்க்கால் வடபூதி நத்தம் பாசன விவசாயிகள் சங்கத்தினர் மற்றும் பாலாறு படுகை முன்னோடி உள்ளிட்ட விவசாயிகளிடம் இருந்து கோரிக்கைகள் வந்துள்ளன.

வேளாண் பெருமக்களின் வேண்டுகோளினை ஏற்று, திருமூர்த்தி அணையிலிருந்து பரம்பிக்குளம் ஆழியாறு திட்டத்தில், பாலாறு பழைய ஆயக்கட்டு பாசனமான தளி வாய்க்கால் பாசனம் மற்றும் பாலாறு படுகையின் இரண்டாம் மண்டலத்தில், நிலையிலுள்ள பயிர்களை காக்கும் பொருட்டு நாளை முதல் தண்ணீர் திறந்துவிட தமிழக முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார்.

இதனால், கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள பொள்ளாச்சி வட்டம் மற்றும் திருப்பூர் மாவட்டத்தில் உள்ள உடுமலைப்பேட்டை, பல்லடம், திருப்பூர், காங்கேயம் மற்றும் தாராபுரம் வட்டங்களிலுள்ள மொத்தம் 96,987 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**திறக்கப்பட்ட தண்ணீர் மேட்டூர் அணையை வந்தடைந்தது**



கர்நாடக மாநில அணைகளிலிருந்து திறந்து விடப்பட்ட தண்ணீர் வெள்ளிக்கிழமை அதிகாலை மேட்டூர் அணையை வந்தடைந்தது. மேட்டூர் அணையிலிருந்து ஆண்டுதோறும் ஜூன் 12-ஆம் தேதி காவிரி டெல்டா பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்படும். மேட்டூர் அணைப் பாசனம் மூலம் திருச்சி, தஞ்சை, திருவாரூர், நாகப்பட்டினம், கரூர், நாமக்கல், ஈரோடு உள்ளிட்ட 12 காவிரி டெல்டா மாவட்டங்களில் 16.05 லட்சம் ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன. குறுவை, சம்பா, தாளடி பயிர்களின் பாசனத்துக்கு 330 டி.எம்.சி. தண்ணீர் தேவைப்படும். பாசனப் பகுதிகளில் பெய்யும் மழையைப் பொருத்து பாசனத்துக்கான நீர்த் தேவை குறையும். நடப்பு நீர்ப் பாசன ஆண்டில் மேட்டூர் அணையின் நீர் இருப்பும், வரத்தும் போதுமானதாக இல்லாததால், மேட்டூர் அணையிலிருந்து காவிரி டெல்டா பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்படவில்லை. இதனால் தொடர்ந்து 5-ஆவது ஆண்டாக காவிரி டெல்டா மாவட்டங்களில்

குறுவை சாகுபடி கடுமையான பாதிப்புக்குள்ளானது. தற்போது காவிரி நடுவர் மன்றத் தீர்ப்பின்படி, கர்நாடகம் தமிழகத்துக்கு தண்ணீர் வழங்காததால் சம்பா சாகுபடியும் பாதிக்கும் நிலை ஏற்பட்டது.

இதையடுத்து கர்நாடகம் உடனடியாக தமிழகத்துக்கு 50 டி.எம்.சி. தண்ணீரை வழங்க வேண்டும் என்று தமிழக அரசு உச்ச நீதிமன்றத்தில் முறையிட்டது. அதன்பேரில், உச்ச நீதிமன்றம் தமிழகத்துக்கு 10 நாள்களுக்கு நொடிக்கு 15 ஆயிரம் கன அடி வீதம் தண்ணீர் திறந்து விட வேண்டும் என்று கர்நாடக அரசுக்கு உத்தரவிட்டது. இதையடுத்து கடந்த 6-ஆம் தேதி கர்நாடக அரசு, கபினி மற்றும் கிருஷ்ணராஜ சாகர் அணைகளிலிருந்து நொடிக்கு 15 ஆயிரம் கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிட்டது.

இந்தத் தண்ணீர் வெள்ளிக்கிழமை அதிகாலை மேட்டூர் அணையை வந்தடைந்தது. கர்நாடக அணைகளில் இருந்து திறந்து விடப்பட்ட நீர்வரத்து காரணமாக வியாழக்கிழமை காலை நொடிக்கு 3,091 கன அடியாக இருந்த மேட்டூர் அணையின் நீர்வரத்து, வெள்ளிக்கிழமை காலை நொடிக்கு 7,905 கன அடியாக அதிகரித்தது. நீர்வரத்து அதிகரித்ததால், வியாழக்கிழமை காலை 76.15 அடியாக இருந்த மேட்டூர் அணையின் நீர்மட்டம் வெள்ளிக்கிழமை காலை 76.74 அடியாக உயர்ந்துள்ளது.

அணையிலிருந்து குடிநீர்த் தேவைக்காக நொடிக்கு 1,250 கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்படுகிறது. அணையின் நீர் இருப்பு 38.78 டி.எம்.சி.யாக இருந்தது. கர்நாடகம் தமிழகத்துக்கு தண்ணீர் திறந்துவிட்டுள்ளதால், விரைவில் மேட்டூர் அணையிலிருந்து குறுவை சாகுபடிக்கு தண்ணீர் திறக்கப்படலாம் என்று விவசாயிகள் எதிர்பார்த்துள்ளனர்.

## கால்நடைகளுக்கான பசுந்தீவன திட்டம் தொடக்கம்: ஆட்சியர் தகவல்



கால்நடைகளுக்கான தீவனப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்திட, பசுந்தீவனத் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. விருப்பமுள்ளவர்கள் அருகில் உள்ள கால்நடை மருத்துவரை அணுகி பயன்பெறலாம் என, மாவட்ட ஆட்சியர் அ. சிவஞானம் வியாழக்கிழமை தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு: கால்நடைகளின் உற்பத்தி திறனுக்கு தீவனம் மற்றும் பசுந்தீவனம் மிகவும் இன்றியமையாதது. பால் உற்பத்தியைப் பெருக்குவதற்கு கறவை மாடுகளுக்கு தேவையான அளவு பசுந்தீவனம் வழங்க வேண்டும். கால்நடைகளுக்கான மொத்த உற்பத்தி செலவீனத்தில் 65-70 விழுக்காடுகள் தீவனம் மற்றும் பசுந்தீவன உற்பத்திக்கு மட்டுமே செலவிடப்படுகிறது.

எனவே, தீவனப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யவேண்டும். அதனால், கால்நடை வளர்ப்போர் பசுந்தீவனத்தை உற்பத்தி செய்வதை ஊக்கப்படுத்தும் வகையில், தமிழக அரசு கடந்த 4 ஆண்டுகளாக மாநில தீவன அபிவிருத்தி திட்டத்தினை செயல்படுத்தி வருகிறது. விருதுநகர் மாவட்டத்தில் கால்நடை பராமரிப்புத் துறையின் மூலம் நடப்பு நிதியாண்டில் அரசு மானியத்துடன் கூடிய தீவனப் பயிர் சாகுபடி திட்டங்கள் செயல்படுத்தப்பட உள்ளன. அதன்படி, உயர்

ரக கலப்பின கம்பு நேப்பியா தீவனப்புல் 450 ஏக்கரில் சாகுபடி செய்ய புல்கரணைகள் வழங்கப்பட உள்ளன. மானாவாரியில் 2500 ஏக்கர் பரப்பில் தீவனச் சோளம் மற்றும் தீவனத் தட்டைப்பயறு சாகுபடி செய்திட தீவன விதைகள் வழங்கப்பட உள்ளது. மேலும், மரவகை தீவனத்தின் முக்கியத்துவத்தை உணர்த்த அகத்தி, சூபா புல் வழங்கப்படும். இத்திட்டங்களின் மூலம் பயன்பெற விருப்பமுள்ள கால்நடை வளர்ப்போர், தங்கள் பகுதியில் உள்ள கால்நடை உதவி மருத்துவரை அணுகி பயன்பெறலாம். மேலும் விவரங்களுக்கு, கால்நடைத் துறை முதுநிலை மருத்துவர் கார்த்திக்கை 94430-11294 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம் என அதில் தெரிவித்துள்ளார்.

## ஆகாயத் தாமரையை அழிக்கும் இயற்கை முறை கரைசல்: பிஏபி திட்ட அதிகாரிகள் பரிசோதனை



ஆகாயத் தாமரையை அழிக்கக் கூடிய இயற்கை முறை கரைசலைப் பயன்படுத்தி பரம்பிக்குளம்-ஆழியாறு திட்ட அதிகாரிகள் முதல்முறையாக சோதனை செய்துவருகின்றனர்.

குளம், ஏரி, ஆறு, நீர்த்தேக்கங்கள் என அனைத்து இடங்களிலும் ஆகாயத் தாமரை பரவியுள்ளது. தென் அமெரிக்காவைத் தாயகமாகக் கொண்டது ஆகாயத் தாமரை.

பிற நாடுகளில் அழகுக்காக வளர்க்கப்பட்ட ஆகாயத் தாமரையின் அதிவேக வளர்ச்சியால் உலகத்தில் உள்ள நீர்நிலைகள் மாசுபட்டுவருகின்றன. இதனால்,

தண்ணீரில் பிராணவாயுவின் அளவு குறைந்து, நீர்வாழ் உயிரினங்களான மீன் உள்ளிட்டவை உயிரிழக்கின்றன. நீர் ஓட்டத்தின் வேகத்தையும் இவை தடுப்பதுடன், துர்நாற்றத்தையும் ஏற்படுத்துகின்றன.

ஆகாயத் தாமரையைக் கட்டுப்படுத்த இந்தியா உள்பட பல்வேறு நாடுகளும் பல முயற்சிகளை செய்துவருகின்றன. தற்போது, இதன் வளர்ச்சியைக் கட்டுப்படுத்த, ஆள்கள் மூலம் அப்புறப்படுத்துவது, படகு மூலம் அப்புறப்படுத்துவது, ரசாயனம் தெளித்து கட்டுப்படுத்துவது போன்ற முறைகள் கையாளப்படுகின்றன. ரசாயனம் தெளிப்பது என்பது மனிதர்கள், விலங்குகள் பயன்படுத்தாத நீரில் மட்டுமே செயல்படுத்தமுடியும். ரசாயனம் தெளிக்காமல் அப்புறப்படுத்தப்பட்ட இடத்தில் சில மாதங்களில் அவை மீண்டும் அடர்த்தியாக வளர்ந்துவிடுகின்றன.

ஆகாயத் தாமரையைக் கட்டுப்படுத்தும் இயற்கை முறை தெளிப்புக் கரைசலை ஹைதராபாதை சேர்ந்த ஏ.ஜி. பயோ சிஸ்டம் அமைப்பின் நிர்வாகியும், ஆராய்ச்சியாளருமான லட்சுமிநாராயணா கண்டுபிடித்துள்ளார். இதை தமிழகத்தில் உள்ள ஈகோ பயோசைட்ஸ் அன்டு பொட்டானிகல்ஸ் நிறுவனத்துடன் இணைந்து தமிழகத்தில் அறிமுகப்படுத்த உள்ளனர்.
முதல்கட்டமாக பொள்ளாச்சி பரம்பிக்குளம்-ஆழியாறு திட்ட அதிகாரிகள் சோதனை முறையில் இதைப் பரிசோதிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர். இயற்கை முறை கரைசல் மூலம் ஆகாயத் தாமரையைக் கட்டுபடுத்தும் முறை இதுவரை தமிழகத்தில் இல்லை.

பொள்ளாச்சி பிஏபி அலுவலகத்தில் ஆகாயத் தாமரையை பிளாஸ்டிக் பக்கெட்டில் வைத்து அதில் தண்ணீர் நிரப்பி சோதனையைத் துவக்கினர். இக்கரைசல் தெளிக்கப்பட்ட அரை மணி நேரத்திலேயே ஆகாயத் தாமரை செடிகள் கருகத் துவங்கின.
இதுகுறித்து பிஏபி கண்காணிப்புப் பொறியாளர் இளங்கோவன் கூறியதாவது: ஆகாயத் தாமரைச் செடியைக் கட்டுப்படுத்த இயற்கை முறையில் உருவாக்கப்பட்ட கரைசலை சோதனை அடிப்படையில் தெளித்து, தொடர்ந்து கண்காணிக்கப் படுகிறது.
கரைசல் தெளித்த அரை மணி நேரத்தில் செடிகள் கருகிவிட்டன. இந்தக் கரைசலால் மாசு ஏற்படுகிறதா அல்லது தண்ணீரில் வேறு ஏதேனும் மாற்றம் ஏற்படுகிறதா என்பது குறித்து ஆய்வு செய்யப்படும்.

தண்ணீர் மாசுபடாமலும், நீரின் தன்மை மாறாமலும் இருந்தால், ஆகாயத் தாமரை படர்ந்துள்ள ஆழியாற்றில் ஆனைமலைப் பகுதியில் சோதனை நடத்தப்படும். சோதனை வெற்றிபெற்றால், இந்தக் கரைசல் குறித்து அரசுக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்படும் என்றார். ஏ.ஜி. பயோ சிஸ்டம்ஸ் நிறுவனத்தின் ஆராய்ச்சியாளர் லட்சுமிநாராயணா கூறுகையில், பல்வேறு ஆராய்ச்சிகளுக்குப் பிறகு, இயற்கை முறை கரைசலைக் கண்டுபிடித்து ஆகாயத் தாமரையை அழிக்கப் பயன்படுத்திவருகிறோம். இந்தக் கரைசலால் நீர் மாசுபடாது. நீர்வாழ் உயிரினங்கள் பாதிக்கப்படாது. செடிகள் உள்ள அடர்த்திக்குத் தகுந்தவாறு கரைசல் அளவைப் பயன்படுத்த வேண்டும். ஒரு பகுதியில் ஒரு வார இடைவெளியில் இரண்டு முறை தெளித்தால் செடிகள் முழுவதும் காய்ந்துவிடும். செடிகள் மீண்டும் முளைப்பதும் 80 சதவீதம் கட்டுப்படுத்தப்படும். பல்வேறு மேலை நாடுகளில் இந்தக் கரைசல் மூலம் ஆகாயத் தாமரையை அழிக்கும் பணியை செய்து வருகிறோம். தற்போது தமிழகத்தில் அறிமுகப்படுத்த உள்ளோம் என்றார்.

## விவசாயிகளிடம் இருந்து நேரடியாக பருப்பு கொள்முதல்: மத்திய அரசு முடிவு



விவசாயிகளிடம் இருந்து பருப்பு வகைகளை மத்திய அரசு நேரடியாகவே கொள்முதல் செய்யும் என்று மத்திய அமைச்சரவைச் செயலர் பி.கே.சின்ஹா கூறியுள்ளார்.

கடந்த சில மாதங்களுக்கு முன்பு பருப்பு வகைகளின் விலை முன்பு எப்போதும்

இல்லாத அளவுக்கு கிலோ ரூ.200-க்கு மேல் அதிகரித்தது. இந்நிலையில் பண்டிகைக் காலம் தொடங்கியுள்ள நிலையில், பருப்பு விலையை கட்டுப்பாட்டுக்குள் வைக்க மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளது.இந்நிலையில், தில்லியில் மத்திய அமைச்சரவைச் செயலர் பி.கே.சின்ஹா தலைமையில் அத்தியாவசியப் பொருள்களின் விலையை முக்கியமாக பருப்பு வகைகளின் விலையை கட்டுப்பாட்டில் வைக்க எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இதில், நுகர்வோர் விவகாரம், உணவு, வருவாய், வர்த்தகம் உள்ளிட்ட துறைகளைச் சேர்ந்த உயரதிகாரிகள் பங்கேற்றனர். கூட்டத்துக்குப் பிறகு செய்தியாளர்களிடம் பி.கே. சின்ஹா கூறியதாவது:

மத்திய அரசு நிறுவனங்களான தேசிய வேளாண் கூட்டுறவு சந்தைக் கூட்டமைப்பு,

இந்திய உணவுக் கழகம், சிறு விவசாயிகள் வேளாண் தொழில் அமைப்பு உள்ளிட்டவற்றின் மூலம் விவசாயிகளிடம் இருந்து பருப்பு வகைகளை நேரடியாகக் கொள்முதல் செய்ய முடிவெடுக்கப்பட்டுள்ளது.

மகாராஷ்டிரம், கர்நாடகம் ஆகிய மாநிலங்களில் ஏற்கெனவே இந்த நேரடிக் கொள்முதல் தொடங்கிவிட்டது. இனி தொடர்ந்து பிற மாநிலங்களிலும் கொள்முதல் நடைபெறும்.

பண்டிகைக் காலத்தில் நியாயமான விலையில் மக்களுக்கு பருப்பு உள்ளிட்ட பொருள்கள் கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும் என்று அனைத்து அரசுத் துறைகளுக்கும் உத்தரவிடப்பட்டுள்ளது என்றார் அவர்.

## விவசாயிகளுக்கு பெரும் பயனளிக்கும் இயற்கை பூச்சிவிரட்டி....

**திருச்சி:** நெற்பயிரில் புகையான் தாக்குதலைக் கட்டுப்படுத்த இயற்கை பூச்சிவிரட்டியை பயன்படுத்தலாம் என்று முன்னோடி விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து இந்த முறையைக் கண்டறிந்துள்ள மூத்த விவசாயி ஸ்ரீதர் கூறியது:

100 மில்லி வேப்பெண்ணெய், ஒரு லிட்டர் கோமியம், 10 வில்லை கற்பூரம் ஆகியவைதான் மூலப்பொருள்கள். வேப்பெண்ணெய்யை தண்ணீரில் கரையும் நிலைக்கு கொண்டு வந்த பின்னர், சோப்பு கரைசல் வேப்பெண்ணெய்யுடன் கலந்தால் அடுத்த நிலைக்கு அவை வரும். கற்பூரம் தண்ணீரில் கரையாது என்பதால் கரும்பு கழிவுப் பாகில் இருந்து தயாரிக்கப்படும் எத்தனால் கொண்டும்

கரைக்கலாம்.

நெற்பயிரில் புகையான் தாக்குதலைக் கட்டுப்படுத்துவதற்கு பெரிதும் உதவியாக இருக்கும். கத்திரி பயிரில் தண்டு துளைப்பான், காய்துளைப்பான் ஆகியவற்றையும், மல்பரி, பப்பாளியில் மாவுப்பூச்சியை கட்டுப்படுத்தும் தன்மைக் கொண்டதாகும்.

நெற்பயிரில் குருத்துப் பூச்சி, இலை சுருட்டுப் பூச்சி ஆகியவற்றை வெகுவாகக் கட்டுப்படுத்தும் தன்மைக் கொண்டதால் விவசாயிகளுக்கு பயன் அளிக்கும். பருத்திப் பயிரில் அனைத்துவகைப் பூச்சிகளைக் கட்டுப்படுத்தும் தன்மை உடையது இந்த இயற்கை பூச்சி, வெங்காயத்தில் அதிக பாதிப்பை ஏற்படுத்தும் நுனிகருகல் நோய்க்கு ஒரு தடவை இயற்கை பூச்சி விரட்டியைப் பயன்படுத்தினால், அறுவடை வரை நோய் பாதிப்பு இருக்காது. வெண்டை மற்றும் உளுந்து பயிர்களில் மஞ்சள் வைரஸ் நோய் முற்றிலும் கட்டுப்படுத்தும் தன்மை இந்த இயற்கை பூச்சிவிரட்டிக்கு உள்ளது.

வேர்க்கடலை பயிரில் தொடக்கம் முதலே தெளிக்கும்போது பூச்சிகள் தாக்குதலே இருக்காது. எலுமிச்சை மரங்களில் அனைத்து பூச்சிகளும் கட்டுப்படுவதுடன் அளவுக்கு அதிகமாக பூக்கள் வருடம் முழுவதும் தொடர்ந்து காய்க்கும் அனைத்து பூக்களின் சாகுபடிக்கும், பயிர்களில் பூச்சிகள் அனைத்தையும் கட்டுப்படுத்துவதோடு மட்டுமல்லாமல் வளர்ச்சி ஊக்கியாகவும் செயல்படுகிறது என்றார் அவர்.

## காட்டுப் பன்றிகளிடமிருந்து விளை பயிர்களைக் காக்கும் வழிமுறைகள்

**தருமபுரி:** தருமபுரி மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் காட்டுப் பன்றிகளினால் விளை நிலங்கள் அதிக அளவு சேதமடைகின்றன. இதனால் விவசாயிகள் இழப்பைச் சந்திக்க வேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். மாவட்டத்தில், குறிப்பாக பாலக்கோடு வேளாண் கோட்டத்தில் அத்தூர்னஅள்ளி, சிரியனஅள்ளி, சீராண்டபுரம், கரகூர், பெல்ரம்பட்டி, பெல்லுஅள்ளி, கருகுட்டனூர், சீங்காடு, மண்சட்டுப்பள்ளி, திருமல்வாடி உள்ளிட்ட வனப்பகுதியையொட்டி உள்ள நிலங்களில் காட்டுப் பன்றிகளினால் தாக்கம் அதிக அளவு உள்ளது. காட்டுப் பன்றிகளின் தாக்கத்தைக் கட்டுப்படுத்தி பயிர்களைக் காக்க, பாலக்கோடு வேளாண் உதவி இயக்குநர் (பொ) மு.இளங்கோவன், வேளாண் அலுவலர் வி.குணசேகரன் ஆகியோர் கூறும் வழிமுறைகள்:

தருமபுரி மாவட்டத்தில், வேளாண் விளைச்சல் குறைய பல்வேறு காரணிகள் இருந்தாலும், வனவிலங்குகளின் தாக்குதலால் அதிக அளவு சேதமடைகின்றன. குறிப்பாக, காட்டுப் பன்றிகளின் தாக்குதலால் அதிகப் பயிர் சேதமடைகிறது. காட்டுப் பன்றிகள் வேர்கள், கிழங்குகள், பூச்சிகள், பாம்புகள் மற்றும் சிறு விலங்குகள் என அனைத்தையும் உண்ணும். பொதுவாக, 15 முதல் 30 எண்ணிக்கை அளவில் காட்டுப் பன்றிகள் குழுவாகச் செல்லும் திறன் கொண்டவை. இவை, காட்டில் உள்ள இயற்கையான உணவைக் காட்டிலும், நெல், சோளம், மக்காச் சோளம், பயறு வகைகள், காய்கறிகள், பழங்கள் போன்றவற்றை அதிக அளவில் நாடுகின்றன. இவை, உண்பதைக் காட்டிலும், சேதம் செய்வதே அதிகமாகும். பொதுவாக, மாலை மற்றும் விடியற்காலை வேளைகளில் இவை வெளியே செல்லும். இவற்றுக்கு கண் பார்வை சற்றுக் குறைவு, ஆனால், நுகர்வுக் திறன் அதிகம். இதனால் பயிர்களை வெகு தொலைவிலேயே கண்டறிந்து விடுகின்றன.

காட்டுப் பன்றிகள் இந்திய வனவிலங்கு பாதுகாப்புச் சட்டத்தில் பட்டியல் 3-இல் இருப்பதால், இவற்றின் உயிருக்கு ஆபத்து விளைவிப்பது தண்டனைக்குரிய குற்றமாகக் கருதப்படுகிறது.

எனவே, இவற்றை தாக்காமல், அவற்றிடமிருந்து பயிர்களைக் காக்க விவசாயிகள் நடவடிக்கை மேற்கொள்ளாலாம்.

முள்கம்பி வேலி அமைத்தல்: வயலைச் சுற்றி முள் கம்பி வேலி நிலத்திலிருந்து ஓர் அடி உயரத்தில் ஒரு கம்பியும், மேலும், ஒவ்வோர் அடி தொலைவில் ஒரு கம்பியுமாக மொத்தம் மூன்று கம்பிகள் அமைத்து கட்டுப்படுத்தலாம்.
சுருள் கம்பி வேலி: சுருள் கம்பி வேலியும் ஓர் அடி தொலைவு இடைவெளியில் அமைக்கலாம். இதில், உள்ள கூரான முனைகள் காட்டுப் பன்றிகளை அச்சம்கொள்ளச் செய்யும். சில சமயம் மாட்டிக் கொண்டு, அவை எச்சரிக்கை ஒலி எழுப்பும். இதனால் மற்ற பன்றிகள் வராமல் இருக்கும்.
கம்பி வலை வேலி: மண்ணிலிருந்து 3 அடி உயரம் கம்பி வலை வேலி எழுப்பினால், பயிருக்குப் பாதுகாப்பாக இருக்கும். இந்த வகை வேலிகள் பயிரிலிருந்து ஓர் அடி தொலைவு தள்ளி அமைக்க வேண்டும்.
சூரிய மின் வேலிகள்: மிகவும் விலை உயர்ந்த பயிராக இருந்தால், இந்த வகை

வேலிகளை அமைக்கலாம். இந்த மின் வேலியில் 12 வோல்ட் மின்சாரம் எப்போதும் பாய்ந்து கொண்டே இருக்கும். இதனால், வயலுக்குள் பன்றிகள் நுழையும்போது, வேலியில் சிக்கி அதிர்வு உண்டாகும். அதிர்வில் சிக்கும் பன்றிகள் எழுப்பும் ஒலியால், மற்ற பன்றிகள் நிலத்துக்குள் வராது. கால்வாய் அமைக்கல்: விவசாய நிலமும் காடும் சேரும் இடத்தில் விவசாயிகள் இரண்டு அடி அகலம் ஒன்றரை அடி ஆழமும் கொண்ட கால்வாய் அமைக்கலாம். பன்றிகளின் கால்கள் குட்டையாக இருப்பதால், இக் கால்வாய்களை தாண்டி உள்ளே வர முடியாது.

வரப்பில் ஆமணக்கு: வரப்பினைச் சுற்றி 4 வரி ஆமணக்கு பயிரிடும்போது, இதன் வாசம் மற்ற பயிரின் வாசத்தை மறைத்துவிடும். ஆமணக்கில் அதிக அளவு ஆல்காய்டுகள் இருப்பதாலும், அவை சுவையின்றி இருப்பதாலும், காட்டுப் பன்றிகளுக்குப் பிடிக்காது.

ரசாயன முறை: போராட் அல்லது திம்மட் குருணை மருந்து 200 கிராம் 1 கிலோ மணலுடன் கலந்து சிறு துளைகள் இடப்பட்ட பாலிதீன் கவரில் கட்டி, காட்டுப் பன்றிகள் வரும் திசையில் 3 மீட்டர் தொலைவுக்கு ஒன்று என்ற அளவில் குச்சியில் கட்டி ஒரு மீட்டர் உயரத்தில் தொங்கவிடலாம். இந்த மருந்தில் வரும் துர்நாற்றம் பயிரின் வாசனையை முற்றிலும் மறைத்து விடுவதால், பன்றிகள் எளிதில் பயிரை கண்டுபிடிக்க முடியாது.

காட்டுப் பன்றிகள் மூக்கின் மூலம் நுகர்ந்து சென்றே பயிர்களையும் வழித்தடத்தினையும் கண்டறிகிறது.

எனவே, வயலைச் சுற்றி முடி திருத்தகத்தில் கிடைக்கும் மனித தலைமுடியினைப் பரப்புவது மற்றும் பழைய கிழிந்த வண்ணப் புடவைகளைக் கட்டுவதன் மூலம் மனித நடமாட்டம் இருப்பதாகக் கருதி காட்டுப் பன்றிகள் வருவதில்லை. மேலும், காட்டுப் பன்றிகளின் இயற்கை எதிரிகளான புலி, சிறுத்தை, ஓநாய் ஆகியவற்றின் ஒலிப் பதிவு செய்யப்பட்டு குறிப்பிட்ட அளவில் கலந்து ஒலிக்கலவையினை எழுப்பும் நவீன கருவிகளை வைத்தும் பன்றிகள் வராமல் தடுக்கலாம்.

எனவே, விவசாயிகள் இத்தகைய வழிமுறைகளைப் பின்பற்றி காட்டுப் பன்றிகளின் தாக்குதலில் இருந்து விளைநிலங்களைக் காத்து மகசூல் இழப்பைத் தடுத்து லாபம் ஈட்டலாம் என்றனர்.

**தினமலர்**

**இன்றைய வேளாண் செய்திகள்**

**உறையும் நதிகள்**

தால் ஏரி ஸ்ரீநகரில் பனியால் உறைந்துவிட்டது. விரைந்து பாயும் நதியே கடுங்குளிரால் உறைவதை ரஷ்ய தலைநகர் மாஸ்கோவில் பார்க்கலாம். மாஸ்கோ ஆறுக்கு ரஷ்ய மொழியில் மஸ்குவா என்று பெயர்.மஸ்குவா என்ற நதியின் பெயரே நகரின் பெயராகி பின் மாஸ்கோ என மாறியது. இந்த நதி மாஸ்கோ நகருக்குள் 42 கி.மீ., மண்ணில் ஓடாமல் சிமென்ட்டால் கட்டப்பட்ட வாய்க்காலில் ஓடுகிறது. மாஸ்கோ நகருக்குள் நதியில் படகுப் போக்குவரத்து நடக்கிறது. கோடையில் ஓடும் மாஸ்கோ பனிக்காலத்தில் உறைகிறது. மக்கள் நதியின் மீது நடந்தே செல்கின்றனர்.

**தோட்டக்கலை பண்ணையில் தரமான நாற்று உற்பத்தி - குறைந்த விலையில் வாங்கி பயன்பெற அழைப்பு**

ஊட்டி: நீலகிரியில் உள்ள அரசு தோட்டக்கலைப் பண்ணை, பூங்காக்களில் உற்பத்தி செய்யப்பட்டு, குறைந்த விலையில் வழங்கப்படும்
நாற்றுகளை வாங்கி, வருமானம் பெற அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

நீலகிரியில் உள்ள விவசாயிகள், தனியார் தோட்ட உரிமையாளர்கள் மற்றும் பொதுமக்கள் பயன்பெறும் வகையில், அரசு தோட்டக்கலைப் பண்ணை மற்றும் பூங்காக்களில், பல வகை நடவுப் பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. மேலும், பழ ஜாம், ஜெல்லி, ஊறுகாய் வகைகள், பழரச பானங்கள் உற்பத்தி செய்யப்பட்டு, விற்கப்படுகின்றன. எங்கு, என்ன கிடைக்கும்?

ஒவ்வொரு பண்ணை, பூங்காவிலும் இருப்பில் உள்ள நாற்றுகளின் விபரம், அவற்றை பெற, அணுக வேண்டிய அலுவலர்களின் மொபைல் எண்கள் விபரம்:

* கல்லார் பண்ணை - பாக்கு நாற்று, காபி, ஜாதிக்காய், கிராம்பு, பலா, லிச்சி நாற்றுகள் (தொடர்புக்கு; 99442-07595).

* பர்லியார் பண்ணை - சில்வர் ஓக் நாற்றுகள், பாக்கு, காபி, ரம்பூடான், ஜாதிக்காய் நாற்றுகள்

( 99447-11820).

* தும்மனட்டி பண்ணை - குப்ரஸ், தேயிலை, கார்னேஷன் நாற்றுகள் (94864-12544).

* நஞ்சநாடு பண்ணை - தேயிலை நாற்றுகள் (94863-44259).

* கோல்கிரைன் பண்ணை - தேயிலை, குப்ரஸ் நாற்றுகள் (94863-44259).

* தேவாலா பண்ணை - குறுமிளகு, பாக்கு, காபி, தேயிலை, ஜாதிக்காய், சில்வர் ஓக் நாற்றுகள் (97867-73359).

* ஊட்டி அரசு தாவரவியல் பூங்கா - அலங்கார மலர்ச் செடி நாற்றுகள், ரோஜா மொட்டு கட்டிய செடிகள், மலர் விதை பாக்கெட்டுகள் (94869-30625).

* ஊட்டி அரசு ரோஜா பூங்கா - ரோஜா மொட்டு கட்டிய செடிகள், ரோஜா பற்று செடிகள், அலங்கார மலர் செடி நாற்றுகள் (97862-17220).

* குன்னூர் சிம்ஸ்பூங்கா - அலங்கார மலர்ச் செடி நாற்றுகள், மரக்கன்றுகள், ரோஜா மொட்டுக் கட்டிய செடிகள், ரோஜா பற்றுச் செடிகள், மலர் விதை பாக்கெட்டுகள் (88839-09319).

* குன்னூர் காட்டேரி பூங்கா - தேயிலை நாற்றுகள், சில்வர் ஓக், குப்ரஸ் நாற்றுகள் (98941-63887).

* தொட்டபெட்டா தேயிலைப் பூங்கா - தேயிலை நாற்றுகள், குப்ரஸ் நாற்றுகள், அலங்கார மலர் செடி நாற்றுகள் (97877-25219).

* குன்னூர், பழம் பதனிடும் நிலையம் - பழ ஜாம், ஜெல்லி, ஊறுகாய் வகைகள், பழரச பானங்கள் (88839-09319).

நீலகிரி கலெக்டர் சங்கர் அறிக்கையில்,“தோட்டக்கலைப் பண்ணைகளில், தரமான நாற்றுக்கள், உற்பத்தி செய்யப்பட்டு, மிகக் குறைந்த விலையில் விற்பனைக்கு தயார் நிலையில் உள்ளன.

இந்திய-ஜெர்மன் திட்டத்தில், தேயிலை நாற்றுகள், 50 சதவீத மானிய விலையில், ஒரு நாற்று, 2 ரூபாய்க்கு வழங்கப்படுகிறது. விவசாயிகள், தோட்டக்கலை அலுவலர்களை தொடர்பு கொண்டு, நாற்றுக்களை பெற்றுக் கொள்ள வேண்டும்,” எனக் கூறியுள்ளார்.

## ஓணத்திற்கு செல்லும் திண்டுக்கல் வாடாமல்லி தினமும் 20 ஆயிரம் கிலோ

திண்டுக்கல்: கேரளாவில் நாளை (செப்.13) நடைபெறும் ஓணம் பண்டிகைக்கு திண்டுக்கல்லில் இருந்து நேற்று 20 ஆயிரம் கிலோ வாடாமல்லி அனுப்பப்பட்டது. கேரளா முழுவதும் நாளை ஓணம் பண்டிகை அதிக விமரிசையாக நடைபெறும். இதற்கு திண்டுக்கல் பூ மார்க்கெட்டில் இருந்து ஆண்டுதோறும் வாடாமல்லி பூக்கள் செல்லும்.

திண்டுக்கல் மாவட்டத்தில் புகையிலைப்பட்டி, பெரியகோட்டை, கோம்பையன்பட்டி, சாணார்பட்டி, சிலுவத்துார், வடமதுரை, வேடசந்துார், நத்தம் பகுதியில் அதிகளவு வாடா மல்லி விளைகிறது. இந்த பூக்கள் செப்.,1முதல் முதல் திண்டுக்கல் பூ மார்க்கெட்டில் இருந்து கேரளாவிற்கு வாங்கி செல்கின்றனர். அத்தப் பூக்கோலத்தில் அதிகம் பயன்படுவது வாடாமல்லிதான்.

ஒரு நாளில் 15 மினி லாரிகளில் இந்தப்பூ கேரளாவுக்கு கொண்டு செல்லப்படுகிறது. நேற்று மட்டும் 20ஆயிரம் கிலோ வரை பூக்கள் ஏற்றுமதியானது. தற்போது ஒரு கிலோ வாடா மல்லி விலை ரூ.15. தற்போது வரத்து அதிகரிப்பால் விலையில் சரிவு ஏற்பட்டுள்ளது. இதனால் கேரள வியாபாரிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

30 லாரிகள் :

திண்டுக்கல் பூ மார்க்கெட் பொருளாளர் சகாயம் கூறியதாவது:

கேரளாவில் நாளை ஓணம் பண்டிகைக்கு திண்டுக்கல் பூ மார்க்கெட்டில் இருந்துதான் வாடா மல்லி பூக்கள் செல்லும்.

இது இரண்டு மாத கால பூ. சீசன் நேரத்தில் வாடா மல்லி கிடைக்காமல், கேரள வியாபாரிகள் திணறுவர். ஓணத்திற்கு வாடாமல்லி வாங்க இன்று கடைசிநாள். 30 ஆயிரம் கிலோ பூக்கள் அனுப்புவதற்கு திட்டமிட்டுள்ளோம். இதனால் வாடாமல்லி விலை இன்று உயர வாய்ப்புள்ளது.

தவிர செண்டு மல்லி, சம்பங்கி, அரளி, மரிக்கெழுந்து பூக்களும் விற்பனைக்கு வரும். கடந்தாண்டை காட்டிலும் இந்தாண்டு அதிகளவு விற்பனையாகியுள்ளது, என்றார்.

## திண்டுக்கல்லை சோலை வனமாக்க ஓராண்டில் 2 லட்சம் மரக்கன்று நடமுடிவு செப்.,18ல் நடவு பணி துவக்கம்

திண்டுக்கல்: திண்டுக்கல்லை சோலை வனமாக்க ஓராண்டில் 2 லட்சம் மரக்கன்றுகள் நடுவதற்கு 'திண்டி மா வனம்' இயக்கம் முடிவெடுத்துள்ளது.

திருப்பூர் மாவட்டத்தை பசுமையாக்கும் முயற்சியில் அங்குள்ள வெற்றி அமைப்பு, 'வனத்துக்குள் திருப்பூர்' என்ற திட்டத்தை செயல்படுத்தி ஒரே ஆண்டில் ஒன்றரை லட்சம் மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளது. விரும்பும் தனியார் நிலங்களில் மரக்கன்றுகளை நடும் இந்த அமைப்பினர், 2 ஆண்டுகளுக்கு அவர்களே தண்ணீர் ஊற்றி பராமரிக்கவும் செய்வர். இதற்காக ஆர்வமுள்ள தன்னார்வலர்கள் பலர் ஒன்றிணைந்து செயல்படுகின்றனர்.

ஆலோசனை கூட்டம்:

இதேபோல மழைவளம் குன்றி வறட்சியை நோக்கி செல்லும் திண்டுக்கல்லையும் வளப்படுத்த 'திண்டி மா வனம்' என்ற இயக்கத்தை உருவாக்கியுள்ளனர். திண்டுக்கல் வர்த்தகர்கள் சங்கம் மற்றும் பிரமுகர்கள், தன்னார்வ நிறுவனங்கள், பசுமையை நோக்கமாக கொண்டு இயங்கும் என்.ஜி.ஓ.,க்கள் இவர்களுடன் இணைந்துள்ளனர்.

விவசாயம் செழித்த பூமி வீழ்ந்து போவதை தடுக்கவும், வளமிக்க மண்ணில் சோலைவனம் உருவாக்கவும் 'தினமலர்' நாளிதழும் இந்த அரிய முயற்சிக்கு கரம் கோர்த்துள்ளது.

'திண்டி மா வனம்' இயக்கத்தின் முதல்ஆலோசனை கூட்டம் நேற்று திண்டுக்கல் வர்த்தகர்கள் சங்கத்தில் நடந்தது. வர்த்தகர்கள் சங்க செயலாளர் பாலன் வரவேற்றார். விழா ஏற்பாடுகளை திட்ட ஒருங்கிணைப்பாளர்கள் முருகேசன், சண்முகவேல் உள்பட பலர் செய்திருந்தனர்.

இரட்டை குழல் துப்பாக்கி:

கூட்டத்தில் பங்கேற்றவர்கள் பேசியதாவது:

வனத்துறை அமைச்சர் சீனிவாசன்: வனத்துறையும், மாநகராட்சியும் இணைந்து இரட்டை குழல் துப்பாக்கியாக செயல்பட்டு இந்த திட்டத்தை செயல்படுத்துவோம். சிறுமலை வனப்பகுதியில் இருந்து மரங்கள் வெட்டப்பட்டு கடத்தப்படுவதாக கூறப்படுவது தவறு. வனத்துறை அமைச்சராக நான் பொறுப்பு ஏற்றபின், துறையின் உயரதிகாரிகளை வைத்து மரங்கள் கடத்தல் குறித்து நடவடிக்கை

எடுக்க அறிவுறுத்தி உள்ளேன். தற்போது கடத்தல் நிகழ்வுகள் எதுவும் நடக்க வில்லை.

மேயர் மருதராஜ்: குமரன் திருநகர் குளம், நல்லாம்பட்டி குளம், குமரன் பூங்கா, மாநகராட்சி பள்ளிகளில் மரங்களை வளர்க்க அனுமதி வழங்கப்படும். மாநகராட்சி இந்த திட்டத்திற்கான அனைத்து ஒப்புதல்களையும் வழங்கும்.

வடம் பிடிப்போம்:

வர்த்தக சங்கத் தலைவர் குப்புசாமி: திண்டுக்கல் மாநகரம் 'திண்டி மா வன'மாக மாற உதவுவோம். தொடர்ந்து உதவிட எங்கள் சங்கமும், உறுப்பினர்களும் தயாராகவே உள்ளோம், என்றார்.

துணைத்தலைவர் சுந்தரராஜன்: தேர் சமநிலை அடைய, 'வாருங்கள் வடம் பிடிப்போம்' என்பதைப் போல, வர்த்தகர்களாகிய நாமும் இணைந்து, திண்டுக்கல்லை 'திண்டி மா வன'மாக மாற்ற துணைபுரிவோம்.

மழை பெறுவோம்:

தோல் வர்த்தக சங்கத் தலைவர் மைதீன்: முன்பு நத்தம் பகுதியில் அடர்ந்த மரங்களால் அடிக்கடி மழை பெய்தது. காலப்போக்கில் குறைந்துவிட்டது. திண்டுக்கல்லில், 20 நாட்களுக்கு ஒருமுறைதான் குடிநீர் கிடைக்கிறது. அதற்கு ஆதாரமான மரங்கள் வெட்டப்பட்டு விட்டன. அதனால் நிலத்தடி நீர் ஆயிரம் அடிக்கும் கீழே சென்றுவிட்டது. மரங்களை வளர்த்து மழை பெற இத்திட்டம் சிறந்த முன் முயற்சி. அதற்கான நடவடிக்கைகளிலும் நாங்களும் துணை நிற்போம்.

டிராக்டர் உபயம்:

ஜி.டி.என்., கல்வி நிறுவன முதன்மை செயல் அலுவலர் ரத்தினம்: இப்பணிக்கு என்னாலான அனைத்து உதவிகளும் செய்வேன். கன்று நட்டபின் நீர் ஊற்ற டிராக்டர் மற்றும் எப்போதும் வற்றாத கிணறும் தருகிறேன்.

பேராசிரியர் குருவம்மாள்: மரங்களும் மனிதர்களும் இணைந்தால் மண் வளம் பெருகும். திண்டி மா வனம் இத்திட்டத்தின் தொடக்கமே. 'வனத்துக்குள் திருப்பூர்' இயக்கத்தின் மூலம் திண்டி மா வனம் தொடக்க நிகழ்வு நடந்தேறுகிறது. சிறுமலையில் இருந்து மரங்கள் வெட்டி கடத்தப்படுகிறது. மழை வளத்தை கொடுக்கும் மரங்கள் அளிக்கப்படாமல் காக்க தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வெற்றிக்கு வழி:

திருப்பூர் 'வெற்றி' அமைப்பின் தலைவர் சிவராம் பேசியதாவது:

முன்னாள் ஜனாதிபதி ஏ.பி.ஜே.,அப்துல்கலாம் மறைந்த தினத்தில், அவரது கனவை நனவாக்க ஒரு லட்சம் மரக்கன்றுகள் நடலாம் என முடிவு எடுத்து

அறிவித்தோம். அந்தப்பணிகளை செயல்படுத்த திருப்பூர் மாவட்ட பொது நல அமைப்புக்கள், இயற்கை ஆர்வலர்கள், இளைஞர்கள், பசுமை அமைப்புக்கள், விவசாய அமைப்புக்கள், தன்னார்வலர்களை ஒன்றிணைத்தோம்.

அதன் விளைவாக முதற்கட்டமாக ஒரு லட்சம் மரக்கன்றுகளை 120 நாட்களில் நட திட்டமிட்டோம். ஒரு மரத்திற்கு இடம் தேர்வு உள்ளிட்ட பணிகளுக்கு ரூ.50 செலவானது.

அநேக சிரமங்கள் இருந்தாலும், பசுமை பரப்பை அதிகரிப்பதே நோக்கமாக இருந்தது. முதல் மூன்று மாதம் கடும் விமர்சனங்களை சந்தித்தோம். தளராமல் கல்லூரிகள், பள்ளிகளில் மரங்களை நட்டோம். இதற்கு கிடைத்த சமூக அங்கீகாரம், கிடைத்த மரியாதை இந்த திட்டத்தை முன்னெடுக்க உதவியது.

குடியிருப்புப் பகுதிகளில் மரக்கன்றுகளை நடும் போது போட்டி மனப்பான்மையும், பொது வெளியிடங்களில் நடும் பொழுது கால்நடைகளினால் பிரச்னையையும் சந்தித்தோம்.

அதனால் மரங்கள் நடுவதற்கான இடங்களை தேர்வு செய்யும்போது, பாதுகாப்பான தனியார் மற்றும் தரிசாக கிடக்கும் நிலங்களை தேர்வு செய்யலாம். விவசாயிகளுக்கு பலனளிக்கும் மரங்களை நடுவதால் அவர்கள் ஆர்வமுடன் திட்டத்தில் பங்கேற்பர்.

இரண்டாயிரம் மரக்கன்றுகள்

* திருப்பூரில் துவங்கப்பட்டுள்ள 'வனத்துக்குள் திருப்பூர்' திட்டத்தின் வெற்றி குறித்து, அங்குள்ள வெற்றி அமைப்பின் தலைவர் சிவராம் மற்றும் உறுப்பினர் குமார் விளக்கினர்.

* திண்டுக்கல்லில் இம்மாதம் முதல் அடுத்த செப்டம்பருக்குள் 2 லட்சம் மரக்கன்றுகள் நடுவதற்கு முடிவெடுக்கப்பட்டது.

* இத்திட்டம் செப்.,18ல் எம்.வி.எம்., அரசு பெண்கள் கல்லூரியில் 2 ஆயிரம் மரக்கன்றுகள் நட்டு துவக்கப்பட உள்ளது.

* திட்டம் குறித்து பொது அமைப்புகளுடன் கலந்துரையாடல் நடந்தது.

* திட்டம் தொடர்பாக 98421- 31856ல் தொடர்பு கொள்ளலாம்.

'வனத்தை உருவாக்கினேன்'

எம்.லிங்கையன், உதவி தலைமை ஆசிரியர் (ஓய்வு): 35 ஆண்டுகளுக்கு முன் வத்தலக்குண்டு மருதாநதி அருகில் உள்ள எனது தரிசு நிலத்தை வளப்படுத்த நினைத்தேன். அதன்படி அன்று இருந்த மாவட்ட கலெக்டர்கள் அதிகாரிகள் தலைமையில் 2 ஆயிரம் மரக்கன்றுகளை நட்டேன். இன்று அழகான, பசுமை வனமாக அது மாறியுள்ளது. என்னுடைய வனத்திற்கு மயில்கள், மான்கள், பறவைகள் வந்து செல்கிறது. அன்று நான் நட்டு வளர்த்த மரங்களால் பசுமைப் போர்வையை அதிகரித்துள்ளேன், என்றார். இவரது பேச்சுக்கு அரங்கத்தில் கைத்தட்டல்கள் அதிர்ந்தது.

## வரப்புகளில் தட்டைப் பயறு சாகுபடி கல்லூரி மாணவிகள் விளக்கம்

உத்தமபாளையம்: நெல் சாகுபடி வயல் வரப்புகளில் தட்டைப்பயறு சாகுபடியால் ஏற்படும் பயன்கள் குறித்து விவசாயிகளுக்கு குள்ளப்புரம் வேளாண் கல்லுாரி மாணவிகள் விளக்கி கூறினர்.

பெரியகுளம், குள்ளப்புரம் வேளாண் தொழில்நுட்ப கல்லுாரி மாணவிகள் அருணா, வேல்மணி, பெனாசிர், பிரதானா, ஸ்ரீதேவசேனா, பெனிட்டா பிரியதர்ஷினி, மீரா,மங்கையர்கரசி, பூரணலட்சுமி ஆகியோர் கிராம தங்கல் திட்டத்தின் கீழ் தங்கி, இப்பகுதி விவசாயிகளுக்கு நவீன தொழில்நுட்பங்களை விளக்குகின்றனர்.
இவர்கள் உத்தமபாளையத்தில் முதல் போக நெல்சாகுபடி வயல்களை பார்வையிட்டனர். அங்கிருந்த விவசாயிகளிடம், 'நெல் சாகுபடி வயல் வரப்புக்களில் தட்டைப்பயறு சாகுபடிசெய்யலாம். இதனால் பயறு உற்பத்தி அதிகரித்து லாபம் கிடைக்கும். மேலும் நெல் பயிரை தாக்கும் பூச்சிகளின் தாக்குதல் குறையும். பயறு வகைகள் சாகுபடிக்கு தமிழக வேளாண் துறை பல்வேறு சலுகைகளை வழங்கி ஊக்குவித்து வருகிறது. மானிய விலையில் விதைகள் மற்றும் பல சலுகைகள் வழங்குகின்றன என்றனர். நிகழ்ச்சியில் உத்தமபாளையம் வேளாண் உதவி இயக்குநர் பாண்டி உள்ளிட்ட விவசாய அலுவலர்கள் இருந்தனர்.

## நெல் பயிரில் புகையான் நோய் தாக்குதல்: அதிகாரிகள் ஆய்வு

கம்பம்: நெல் பயிரில் புகையான தாக்குதல் ஆரம்பமாகியுள்ளதால், நோயின் தாக்கம் குறித்து நெல் வயல்களில் வேளாண் அலுவலர்கள் ஆய்வு செய்து வருகின்றனர்.

கம்பம் பகுதியில் நெல் சாகுபடியில் ஆங்காங்கே புகையான் தாக்குதல் தெரியத் துவங்கியுள்ளது. குறிப்பாக வெட்டுக்காடு, கருநாக்கமுத்தன்பட்டி பகுதிகளில் நெல் பயிரில் தத்துப்பூச்சிகள் பறந்து வருகிறது. இந்த வகை பூச்சிகள் தான் புகையானை உருவாக்குபவை. முதிர்ச்சியடைந்த பயிர்கள் காய்ந்து திட்டுக்களாக காணப்படும்.

புகையான் தாக்குதலுக்கு ஆளான பயிர்கள் 'தீய்ந்த' மாதிரி தெரியும்.

புகையானை கட்டுப்படுத்த வயலில் நீரை முழுவதுமாக வடித்து விட வேண்டும். இந்த நீர் வேறு வயல்களுக்கு செல்லக்கூடாது. பயிர்களை விலக்கி சூரிய வெளிச்சம் மற்றும் நல்ல காற்றோட்டம் தூரின் அடிப்பகுதியில் நன்கு படுமாறு செய்ய வேண்டும். தழைச்சத்து உரங்களை அதிகமாக இடுவதை தவிர்க்க வேண்டும்.

புகையான் தாக்குதல் காணப்படுவதால் மாவட்ட நிர்வாகம் கள ஆய்வுகள் செய்ய வலியுறுத்தியுள்ளது. அதன்பேரில் உதவி இயக்குநர் (தரக்கட்டுப்பாடு) ஜெயப்பாண்டியன், உதவி இயக்குநர் ராதாகிருஷ்ணன், வேளாண் அலுவலர் அம்பிகா தலைமையிலான குழுவினர், புகையான் தாக்கிய வயல்களை ஆய்வு மேற்கொண்டனர்.

உதவி இயக்குநர் ஜெயப்பாண்டியன்,"கம்பம் அருகே சில பகுதிகளில் புகையான் தாக்குதல் தெரிகிறது. அதைக் கட்டுப்படுத்த என்ன செய்ய வேண்டும் என விவசாயிகளிடம் நேரில் கூறியுள்ளோம். பெரிய அளவில் பாதிப்பு இல்லை. தடுப்பு நடவடிக்கைகள் துரிதமாக எடுக்கப்பட்டுள்ளது. மேலும் உதவி வேளாண் அலுவலர்கள் புகையான் தாக்கியுள்ள வயல்களை கண்காணித்து வர ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது' என்றார்

## பழமை மாறாத விவசாயிகள் நெல் அவித்து அரிசி தயாரிப்பு

ஆர்.எஸ்.மங்கலம்: ஆர்.எஸ்.மங்கலம் பகுதியில் பழமை மாறாமல் இன்றும் விவசாயிகள் வீடுகளில் நெல் அவித்து அரிசியாக்குகின்றனர்.

நாகரீகம், வேலைப்பளு காரணமாக கடந்த 30 ஆண்டுகளுக்கும் மேலாக பெரும்பாலான பகுதிகளில் அரிசி ஆலைகளில் நெல் மூடைகளை கொடுத்து

அரிசியாக்கி பயன்படுத்தும் நிலைக்கு விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளனர். ஆலைகளில் மொத்தமாக நெல் அவித்து அரிசியாக்க வேண்டிய நிலை உள்ளதால் அரிசியின் தரம் குறைகிறது.

இதனால் ஆர்.எஸ்.மங்கலம் , நத்தக்கோட்டை, திருவாடானை, ஆனந்துார், உள்ளிட்ட பகுதிகளில் பெரும்பாலான வீடுகளில் இன்றும் முன்னோர் காட்டிய வழியில் அண்டாக்களில் தீ மூட்டி நெல் அவிக்கும் பணியில் பெண்கள் ஈடுபடுகின்றனர்.

நந்தக்கோட்டையை சேர்ந்த பெரியநாயகி கூறுகையில், 'வீட்டு தேவைக்கு ஏற்ப அண்டாக்களில் நெல் மணிகளை கொட்டி தீ மூட்டி நெல் அவிக்கிறோம். பெரும்பாலும் 70 படி கொள்ளளவு கொண்ட அண்டாக்களே அதிகம் பயன்படுத்தப்படுகின்றன. சுமார் 2 மணி நேரத்தில் ஒரு அண்டா நெல் அவித்து விடமுடியும்.

அவ்வாறு வீடுகளில் நெல் அவிக்கப்படும் நெல் மணிகளை களத்து மேட்டில் இரண்டு நாட்கள் வரை வெயிலில் உலர்த்திய பின் அரவை செய்து அரிசியை பெறுகிறோம்.

இவ்வாறு தயார் செய்யப்படும் அரிசி விரைவாக கொதித்து சாதமாக(சோறு) மாறும்.

இதனால், சிலிண்டர் பயன்பாடு, விறகு, உள்ளிட்ட எரிபொருள் செலவு குறைகிறது.

மேலும் நீர் ஆகாரம், சாதம் ஆகியவை மறு நாள் பயன்படுத்தினாலும் சுவை மிகுந்திருப்பதுடன், உடல் ஆரோக்கியமும் அதிகரிக்கிறது. இது போன்ற பயன்கள் ஆலைகளில் கொடுத்து வாங்கும் அரிசிகளில் இல்லை, என்றார்.

## கரும்பில் இடைக்கணு புழு தடுக்க செயல் விளக்க பயிற்சி

குமாரபாளையம்: குப்பாண்டபாளையத்தில், கரும்பில் சொத்தையை ஏற்படுத்தும் இடைக்கணுப் புழுக்களைக் கட்டுப்படுத்துதல் குறித்த செயல்விளக்கப் பயிற்சி முகாம் நடந்தது. குமாரபாளையம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம், வேளாண் மற்றும் கிராம அளவிலான அம்மா பண்ணை மகளிர் குழுவினர் இணைந்து நடத்திய இம்முகாமை, சங்கத் தலைவர் தேவராஜன் துவக்கி வைத்தார்.

தற்போது, பருவநிலை மாறுபாடு காரணமாக ஆங்காங்கே கரும்பில் இடைக்கணுப்புழுக்கள் தாக்குதல் அதிகரித்துள்ளது. இதை மருந்து தெளித்து கட்டுப்படுத்துவது இயலாத காரியமாக உள்ளது. இயற்கைக்கு கெடுதல்

விளைவிக்காத மருந்துகள் இல்லாத, சிக்கனமான எளிதாகவும், உயிரியல் ரீதியாகவும், ஒட்டுண்ணிகள் மூலம் உருவாக்கப்படும் குழவிகளைக் கொண்டு கட்டுப்படுத்த ஆலோசனை வழங்கப்பட்டது. இதில், பள்ளிபாளையம் உதவி வேளாண்மை அலுவலர் மாயாஜோதி, வேளாண்மை உதவி இயக்குனர் அசோக்குமார் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

## சத்துக்கள் நிறைந்த சிவப்பு கொய்யா

காரைக்குடி: சிவப்பு கொய்யாவில் கரோட்டீனாய்டு' நிறமி அதிகமாக இருக்கும். வெள்ளை கொய்யாவை விட நீர்சத்து, வைட்டமின் சி சத்து அதிகம். சர்க்கரை, ஸ்டார்ச் குறைவு. இந்த கொய்யா நீரிழவு நோயாளிகளுக்கு உகந்தது; மேலும் நோய் எதிர்ப்பு சக்தியை அளிக்கிறது என, டாக்டர்கள் கூறுகின்றனர்.
கொய்யாவில் உள்ள ஆன்டி-ஆக்ஸிடென்ட்கள் செல் பாதிப்பு ஏற்படுத்துவதை தடுக்கிறது. கடந்த காலங்களில் வீடுகளில் வளர்க்கப்பட்ட சிவப்பு கொய்யா தற்போது தமிழகத்தில் அரிதாகி விட்டது.
மீண்டும் சிவப்பு கொய்யாவை தமிழக மக்கள் விரும்பி உண்ண துவங்கியுள்ளனர்.தேவை அதிகரித்துள்ளதால் ஆந்திரா, கர்நாடகா மாநிலங்களிலிருந்து சிவப்பு கொய்யா கொண்டு வரப்படுகின்றன.

காரைக்குடி பழக்கடை உரிமையாளர் நுார்முகம்மது கூறுகையில், சிவப்பு கொய்யாவிற்கு கிராக்கி உள்ளது. பெங்களூரு சிவப்பு கொய்யா கிலோ ரூ.80 க்கு விற்கப்படுகிறது," என்றார்.

## ஒகேனக்கல், பென்னாகரம் பகுதியில் பரவலாக மழை: விவசாயிகள் மகிழ்ச்சி

பென்னாகரம்: ஒகேனக்கல், பென்னாகரம் பகுதிகளில் பரவலாக மழை பெய்ததால், விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்தனர். தர்மபுரி மாவட்டத்தில், வழக்கத்திற்கு மாறாக தென்மேற்கு பருவமழை காலத்தில், வெயில் அளவு அதிகரித்து வந்ததுடன், பருவ மழையும் சராசரி அளவை எட்டாமல் உள்ளது. இதனால், மானாவாரியாக சாகுபடி செய்துள்ள நிலக்கடலை, சோளம், கம்பு, பருத்தி உள்ளிட்ட பயிர்கள் வாடி வருகின்றன. இந்நிலையில், நேற்று முன்தினம் காலை முதல் வானம் மேக மூட்டத்துடன் காணப்பட்டதுடன், பல பகுதிகளில் சாரல் மழை பெய்தது. இரவு, 10:00 மணிக்கு மேல் ஒகேனக்கல்,

பென்னாகரம் மற்றும் அதை ஒட்டியுள்ள பகுதிகளில் பரவலாக மழை பெய்தது. இதில் அதிகபட்சமாக ஒகேனக்கல்லில், 9.2 மில்லி மீட்டர், பென்னாகரத்தில், 8 மி,மீ., மழையளவு பதிவானது. மேலும், மாவட்டத்தின் பிற பகுதிகளில் மழையளவு பதிவாக விட்டாலும், லேசான சாரல் மழை பெய்ததால், இரவு நேரத்தில் குளுமையான சீதோஷ்ண நிலை ஏற்பட்டது. பென்னாகரம் பகுதியில் பெய்த மழையால், மானாவாரியாக பயிர் செய்துள்ள விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

### சத்தீஸ்கரில் கனமழை: இந்திராவதி ஆற்றின் நீர் மட்டம் உயரும் அபாயம்

சத்தீஸ்கர்: சத்தீஸ்கர் மாநிலம் பஸ்தாரில் கடும் கனமழை காரணமாக வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக இந்திராவதி ஆற்றின் நீர் மட்டம் உயரும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

### மேட்டூர் நீர்மட்டம் 80 அடியை எட்டுகிறது



மேட்டூர் : கர்நாடக மாநிலம் கபினி, கிருஷ்ணராஜசாகர் அணைகளில் இருந்து காவிரியில் 15 ஆயிரம் கனஅடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. இந்த தண்ணீர் பிலிகுண்டுலு வழியாக மேட்டூர் அணையை வந்தடைகிறது. இதனால், நேற்று முன்தினம் 15,070 கனஅடியாக இருந்த நீர்வரத்து, நேற்று வினாடிக்கு 16,053 கனஅடியாக உயர்ந்தது. தண்ணீர் வரத்து தொடர்ந்து அதிகரித்து வருவதால், அணையின் நீர்மட்டம் கடந்த 2 நாட்களில் 2.52 அடி வரை உயர்ந்து, நேற்று காலை நிலவரப்படி 79.26 அடியாக உள்ளது. இன்று 80 அடியை எட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அணையில் இருந்து குடிநீர் தேவைக்காக வினாடிக்கு 1,250 கனஅடி தண்ணீர் திறந்து விடப்படுகிறது. நீர் இருப்பு 41.22 டிஎம்சி. ஒகேனக்கல்லில் நீர்வரத்து வினாடிக்கு 15 ஆயிரம் கனஅடியாக இருப்பதால், அருவிகளில் தண்ணீர் ஆர்ப்பரித்து கொட்டுகிறது. இதையடுத்து, பாதுகாப்பு காரணங்களுக்காக காவிரியில் பரிசல் இயக்குவதற்கு மாவட்ட நிர்வாகம் தடை விதித்துள்ளது.

## ஓணம் பண்டிகை விற்பனைக்காக நெல்லையில் இருந்து 100 டன் காய்கறிகள் கேரளா சென்றது



நெல்லை: ஓணம் பண்டிகையை முன்னிட்டு நெல்லை நயினார்குளம் மார்க்கெட்டில் இருந்து கேரளாவுக்கு 100 டன் காய்கறிகள் அனுப்பி

வைக்கப்பட்டன. ஓணம் பண்டிகையை முன்னிட்டு மார்க்கெட்டிற்கு நாளை விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. கேரளாவில் பிரசித்தி பெற்ற பண்டிகையான ஓணம் நாளை (13ம் தேதி) கொண்டாடப்படுகிறது. இதை முன்னிட்டு கேரளாவில் இன்று முதல் 14ம் தேதி வரை விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. மகாபலி மன்னனை வரவேற்கும் விதமாக வீடு, வாசல்களை மலர்களால் அலங்கரித்து, அனைத்து வகை காய்கறிகளால் விரும்பிய உணவை சமைத்து கேரள மக்கள் ஓணம் பண்டிகையை கொண்டாடுவர். கேரளாவின் 90 சதவீத காய்கறி தேவைகளை தமிழகமே பூர்த்தி செய்து வருகிறது. அதிலும் நெல்லை, குமரி மாவட்டங்களில் இருந்து ஆண்டுதோறும் டன் கணக்கில் ஓணம் பண்டிகைக்கு காய்கறிகள் அனுப்பி வைக்கப்படும். இதற்காக கேரளாவை சேர்ந்த காய், கனி வியாபாரிகள் நெல்லை நயினார்குளம் மார்க்கெட்டில் இரு தினங்களுக்கு முன்னதாகவே முகாமிட்டு தேவையான காய்கறிகளை மொத்தமாக கொள்முதல் செய்வர். ஓணத்தை ஒட்டி அவை லாரிகளில் மூட்டை, மூட்டையாக அனுப்பி வைக்கப்படும்.

ஓணம் பண்டிகைக்காக நேற்று நெல்லை நயினார்குளம் மார்க்கெட்டில் இருந்து 100 டன் காய்கறிகள் கேரளாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டன. கத்தரி, கேரட், தக்காளி, வெண்டைக்காய், பூசணிக்காய், தடியங்காய் ஆகியவை வழக்கத்தை விட அதிகமாக அனுப்பப்பட்டன. நயினார்குளம் மார்க்கெட்டில் தற்போது காய்கறிகளின் விலை குறைவாக இருக்கும் சூழலில் சென்ற ஆண்டை விட இந்த ஆண்டு கேரளாவுக்கு காய்கறிகள் கூடுதலாக அனுப்பப்பட்டன. இதுகுறித்து நயினார்குளம் காய்கறி மார்க்கெட்வியாபாரி பாலகிருஷ்ணன் கூறுகையில், ‘‘கேரளாவில் ஓணம் பண்டிகைக்காக இந்த ஆண்டு நெல்லை மார்க்கெட்டிலிருந்து 100 டன் காய்கறிகள் அனுப்பப்படுகிறது. திருவனந்தபுரம், கொச்சி, கொல்லம், எர்ணாகுளம், அடூர், கோட்டயம், காயங்குளம் உள்ளிட்ட கேரளாவில் பல பகுதிகளுக்கு நயினார்குளம் மார்க்கெட்டிலிருந்து காய்கறிகள் செல்கின்றன. பச்சை காய்கறிகளில் வெள்ளரிக்காய், கத்தரிக்காய், பூசணிக்காய், தடியங்காய் ஆகியவற்றை அங்குள்ள மக்கள் விரும்பி வாங்குவர்’’ என்றார்.

**கால்நடைகளுக்கு மருத்துவ முகாம்**

ரிஷிவந்தியம்: ரிஷிவந்தியம் அடுத்த கரையாம்பாளையம் கிராமத்தில் விவசாயிகள் ஆடு, மாடுகளை வளர்த்து வருகின்றனர். இந்நிலையில் கடந்த நான்கு நாட்களுக்கு முன் பொன்னுசாமி என்பவரது மாடு வாயில் புண் வந்து உணவு சாப்பிடாமல் இறந்துள்ளது. இதையடுத்து நேற்று அதே கிராமத்தை சேர்ந்த மாரிமுத்து என்பவரது மாடும் அதேபோல் இறந்துள்ளது. மேலும் அதே பகுதியில் வசிக்கும் சகுந்தலா, ராமசாமி, சுப்ரமணி ஆகியோரது மாடுகள் மர்ம நோயால் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக தெரிகிறது. இதனையடுத்து கரையாம்பாளையம் கிராமத்தில் கால்நடை நோய் புலனாய்வு உதவி இயக்குனர் குருவய்யா, கள்ளக்குறிச்சி கோட்ட கால்நடை உதவி இயக்குனர் குபேந்திரன் மற்றும் மருத்துவர்கள் ஆய்வு செய்து பாதிக்கப்பட்ட மாடுகளுக்கு சிகிச்சை அளித்தனர். 200க்கும் மேற்பட்ட மாடுகளுக்கு தடுப்பூசி போடப்பட்டது. கால்நடைத்துறை அதிகாரிகள் இந்த நோய் வெயில் தாங்க முடியாமல் ஜூரம் அடித்து வாய்ப்புண் ஏற்பட்டு இறந்துள்ளதாக தெரிவித்தனர்.

**கோழிகளில் தீவன எடுப்பு குறையும் வானிலை மையம் தகவல்**

நாமக்கல்: நாமக்கல் கால்நடை வானிலை ஆலோசனை மையம் வெளியிட்டுள்ள அறிக்கை: நாமக்கல் மற்றும் அதன் சுற்றுப்புற பகுதியில் வரும் 4 நாட்களும் வானம் பொதுவான மேகமூட்டத்துடன் காணப்படும். சில இடங்களில் லேசான மழைக்கு வாய்ப்புள்ளது. காற்றின் வேகம் மணிக்கு 4 கி.மீ வேகத்தில் மேற்கில் இருந்து வீசும். தென்மேற்கு பருவமழையின் தாக்கம் தற்போது வடமேற்கு மாவட்டங்களில் இல்லாததால், பகல் மற்றும் இரவு வெப்ப அளவுகள் சற்று உயர்ந்த அளவுகளில் நிலவும். செப்டம்பர் மாதத்தில் தென்மேற்கு பருவமழை என்பது, வடமாநிலங்களில் இருந்து அதன் தாக்கத்தை முழுவதும் குறைத்து முடிவுறும் காலகட்டமாகும். எனவே இதன் காலகட்டம் தென்மாநிலங்களில் செப்டம்பர் வரை நீடிக்கும். அதன் காரணமாக இரு நாட்களுக்கு பின் சற்று மேகமூட்டமும், சில இடங்களில் லேசான மழைக்கும் வாய்ப்புள்ளது.

அதிகபட்சம் வெப்பம் காரணமாக, தீவன எடுப்பு இயல்பை விட குறையும். எனவே முட்டை உற்பத்தியும், முட்டை ஓட்டின் தரமும் பாதிக்காமல் இருக்க, ஒரு டன்னுக்கு ஒரு கிலோ சோடா உப்பை தீவனத்தில் சேர்க்க வேண்டும்.மேல் மூச்சுக்குழாய் மற்றும் ஈரல் அயற்சி நோயால் கோழிகள் பாதிக்கப்பட்டுள்ளது.

எனவே கோழிகளுக்கு அளிக்கப்படும் தீவனம் மற்றும் தண்ணீரில் கிருமிகளின் தாக்கம் உள்ளதா என்பதை ஆய்வத்தில் பரிசோதனை செய்து அதற்கு தகுந்தாற்போல தடுப்பு மருந்துகளை பண்ணையாளர்கள் கொடுக்க வேண்டும். இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நாமக்கல் மாவட்டத்தில் கோழி வளர்ப்பு திட்டத்தில் பெண்கள் பயன்பெற அழைப்பு

நாமக்கல்: நாமக்கல் மாவட்டத்தில் 50 சதவீத மத்திய மற்றும் 50 சதவீத மாநில அரசு பங்களிப்புடன் செயல்படுத்தப்பட உள்ள புழக்கடை கோழி வளர்ப்பு திட்டத்தில் பெண்கள் பயன்பெறலாம் என கலெக்டர் வேண்டுகோள் விடுத்துள்ளார். இதுகுறித்து நாமக்கல் கலெக்டர் ஆசியாமரியம் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

ஊரகப்பகுதிகளில் கோழி வளர்ப்புத்தொழிலை மேன்மை அடையச்செய்ய, கால்நடை பராமரிப்புத்துறை மூலம் ஊரக புழக்கடை கோழி வளர்ப்புத்திட்டத்தை 50 சதவீத மத்திய மற்றும் 50 சதவீத மாநில அரசு பங்களிப்புடன் செயல்படுத்தப்பட உள்ளது.

இதன்மூலம் வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ளவர்கள் வேலைவாய்ப்புடன் நிரந்தர கூடுதல் வருமானமும் பெறுவர். மேலும் வருவாய் ஈட்டக்கூடிய சொத்துக்களின் உரிமையாளராகவும் மேம்படுத்தப்படுவர். இத்திட்டத்தில் தேர்ந்தெடுக்கப்படும் பயனாளிகளுக்கு கால்நடை உதவி மருத்துவர் மூலம் ஒரு நாள் பயிற்சி அளிக்கப்படும். பின்னர் கோழிகள் வழங்கப்படும். கோழிகளுக்கான கொட்டில் அமைக்க □1,500 வழங்கப்படுகிறது.

மேலும், கால்நடை பராமரிப்புத்துறை மூலம் மருத்துவ உதவி, குடற்புழு நீக்கம் மற்றும் தடுப்பூசிகள் அளிக்கவும் திட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. நாமக்கல் மாவட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள 100 பெண் பயனாளிகளில், 80 பேர் பொது பிரிவினராகவும், 20 பேர் தாழ்த்தப்பட்டவராகவும் தேர்ந்தெடுக்கப்படுவர். விதவை, ஆதரவற்றவர்கள், திருநங்கைகள் மற்றும் மாற்றுதிறனாளிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ளவர்களுக்கான பட்டியலில் இடம் பெற்றிருக்க வேண்டும் அல்லது ஏழையாக இருக்க வேண்டும். புதுவாழ்வுத்திட்டம் அல்லது தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதாரத்திட்டம் உறுப்பினர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும். இத்திட்டத்தில் பயன்பெற விரும்புவர்கள், கால்நடை மருந்தகத்தை

அணுகி விண்ணப்பம் பெற்று பூர்த்தி செய்து கொடுக்க வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## பக்ரீத் பண்டிகையையொட்டி போச்சம்பள்ளி சந்தையில் ஆடுகள் விலை உயர்வு

போச்சம்பள்ளி : பக்ரீத் பண்டியையொட்டி, போச்சம்பள்ளி வாரச்சந்தையில் ஆடுகள் விற்பனை ஜோராக நடந்தது. விலையும் உயர்ந்தது. கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளியில் ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் வாரச்சந்தை பிரசித்தம். நேற்று நடைபெற்ற சந்தைக்கு வேலூர், திருவண்ணாமலை, கிருஷ்ணகிரி, சேலம், தர்மபுரி, மேட்டூர் மற்றும் ஆந்திரா, கர்நாடாவில் இருந்து நூற்றுக்கும் மேற்பட்ட வியாபாரிகள் வந்திருந்தனர். இதில் போச்சம்பள்ளி மற்றும் சுற்றுப்புற கிராமங்களில் இருந்து 7 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஆடுகளை விவசாயிகள் கொண்டு வந்தனர்.

நாளை பக்ரீத் பண்டிகை கொண்டாடப்படுவதையொட்டி, சந்தையில் ஆடு விற்பனை களை கட்டியது. இதனால், விலையும் உயர்ந்தது. கடந்த வாரம் □12 ஆயிரத்திற்கு விற்பனை செய்யப்பட்ட ஆடு, நேற்றைய சந்தையில் □15 ஆயிரத்திற்கு விற்பனையானது. ஒரு ஆட்டிற்கு □3 ஆயிரம் வரை கூடுதலாக கிடைத்ததால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர். மாலை வரையிலும் சுமார் 5 ஆயிரம் ஆடுகள் விற்பனையானது.

## மல்லிகை கிலோ ரூ.100 ஆக வீழ்ச்சி

சத்தியமங்கலம், : சத்தியமங்கலம் சுற்றுவட்டார கிராமங்களில் 25 ஆயிரம் ஏக்கரில் மல்லிகைப்பூ பயிரிடப்படுகிறது. இங்கு விளையும் பூக்கள் சத்தியமங்கலத்தில் விவசாயிகளால் நடத்தப்படும் பூமார்க்கெட்டிற்கு கொண்டுவரப்பட்டு பின்னர் வேன் முலம் கர்நாடக மாநிலத்தில் உள்ள பெங்களூரு, மைசூரு, தும்கூர் உள்ளிட்ட பல்வேறு நகரங்களுக்கு விற்பனைக்கு அனுப்பப்படுகிறது.

இந்நிலையில் நேற்று காவிரி நீர் பிரச்சினை காரணமாக கர்நாடக மாநிலத்தில் முழு அடைப்பு போராட்டம் நடைபெற்றது. இதனால் மல்லிகை பூக்களை விற்பனைக்கு அனுப்ப முடியாமல் 6 டன் வரை தேக்கமடைந்தது. இதனால் விலை

வீழ்ச்சியடைந்து கிலோ ரூ.500க்கு விற்பனையாக வேண்டிய மல்லிகை பூக்கள் ரூ.100க்கு விற்பனையானது. இதனால் விவசாயிகள் நஷ்டத்திற்கு ஆளானார்கள். கர்நாடகாவிற்கு அனுப்பவேண்டிய பூக்கள் கோவை மற்றும் கேரளாவிற்கு அனுப்பப்பட்டது.

### ஆவின் கலப்பு தீவனம் விலை உயர்வு

காங்கயம், : பருத்தி விதை புண்ணாக்கு விலை மூட்டைக்கு ரூ.ஆயிரம் அதிகரித்துள்ள நிலையில், பாலுக்கு கட்டுப்படியான விலை கிடைக்காததால், உற்பத்தியாளர்கள் ஏமாற்றம் அடைந்துள்ளனர். காங்கயம் பகுதியில் சில இடங்களில் விவசாயிகள் வேளாண் தொழில் செய்து வந்தாலும், தண்ணீர் பற்றாக்குறை, கூலியாட்கள் கிடைக்காமை போன்ற காரணங்களால் உப தொழிலாக கறவை மாடுகளை வளர்த்து பால் உற்பத்தியில் ஈடுபட்டு வருகின்றனர். தற்போதைய சூழ்நிலையில் பால் உற்பத்தி ஓரளவுக்கு விவசாயிகளுக்கு கைகொடுத்து வந்தாலும், தொடர்ந்து விலையேற்றம் கண்டுள்ள மாட்டுத் தீவனங்களால் தடுமாற செய்துள்ளது.

கடந்த ஆண்டு இதே காலகட்டத்தில் மூட்டை ரூ.800 ஆக இருந்த பருத்தி புண்ணாக்கு விலை, தற்போது ரூ.1,800க்கு விற்பனையாகிறது. ஆவின் கலப்பு தீவன மூட்டை ரூ.750 ஆக இருந்தது, ரூ.1,150 ஆக உயர்ந்துள்ளது. கடந்த ஒரு மாதத்தில் மட்டும் பருத்தி விதைப்புண்ணாக்கும், ஆவின் கலப்பு தீவனமும் மூட்டைக்கு ரூ.150 வரை உயர்ந்துள்ளது. ஆனால், கடந்த ஆண்டு ஒரு லிட்டர் பால் எந்த விலைக்கு கொள்முதல் செய்யப்பட்டதோ அதே விலைக்கு தான் இப்போதும் கொள்முதல் செய்யப்படுகிறது.

இதுகுறித்து பால் உற்பத்தியாளர்கள் தரப்பில் கூறுகையில், கடந்த ஆண்டை விட தற்போது மாட்டுத் தீவனங்கள், புண்ணாக்கு விலை பல மடங்கு அதிகரித்த நிலையில் பால் விலை மட்டும் உயரவில்லை. மேலும், கடந்த சில மாதங்களாக மழை சரியாக பெய்யாததால் மேய்ச்சல் நிலங்கள் காய்ந்துவிட்டன. பருத்தி புண்ணாக்கு, தவிடு, கலப்பு தீவனம் ஆகியவற்றை அதிகளவில் மாடுகளுக்கு தர வேண்டியுள்ளது. இதனால், செலவு அதிகரித்துக் கொண்டே செல்கிறது. இதனால், மாடுகளுக்கு கொடுக்கப்படும் தீவனங்கள் அளவுக்கு கூட பாலில் வருமானம் வருவதில்லை. அரசு உடனடியாக பால் கொள்முதல் விலையை மாட்டுப்பால்

லிட்டர் ரூ.35 ஆகவும், எருமைப்பால் லிட்டர் ரூ.45 ஆகவும் உயர்த்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றார்.

## பயறுவகை பயிர் சாகுபடி விழிப்புணர்வு முகாம்

திருச்சி : புள்ளம்பாடி ஒன்றியம் ரெட்டிமாங்குடி கிராமத்தில் துவரை, உளுந்து, பச்சைப்பயறு, தட்டைப்பயறு, மொச்சை சாகுபடி விவசாயிகளுக்கு விழிப்புணர்வு முகாம் நடந்தது. ஒன்றிய கவுன்சிலர் அம்மாசி முன்னிலை வகித்தார். முகாமை துவக்கி வைத்து புள்ளம்பாடி வேளாண்மை உதவி இயக்குனர் மரியரவி ெஜயக்குமார் பேசினார். அதில் பயறுவகை பயிர்களின் உற்பத்தி திறன் குறித்து விளக்கம் அளிக்கப்பட்டது. வேளாண்மை உதவி அலுவலர்கள் சுரேஷ்குமார், ராஜா, ரகுபதி கலந்து கொண்டனர். முகாமில் ரெட்டிமாங்குடி, பெரியகுறுக்கை, அகரம் கிராமங்களை சேர்ந்த 40 விவசாயிகள் கலந்து கொண்டனர்.

## நாட்டுக்கோழி வளர்ப்பு பயிற்சி முகாம்

திருச்சி : திருச்சி கொட்டப்பட்டு கோழிபண்ணை சாலையில் உள்ள கால்நடை பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தில் இலவச நாட்டுக்கோழி வளர்ப்பு பயிற்சி வரும் 14, 15ம் தேதிகளில் நடக்கிறது. பயிற்சி வகுப்பில் நாட்டுக்கோழி இனங்கள், தரம் உயர்த்தப்பட்ட நாட்டுக்கோழி இனங்கள், நாட்டுக்கோழி வளர்ப்பு, தீவண மேலாண்மை, கோழி குஞ்சுகளை பறவை கூண்டில் வளர்த்தல், நோய் தடுப்பு முறை குறித்து விளக்கம் அளிக்கப்படுகிறது.

பயிற்சியில் சேர விரும்புவோர் வரும் 14ம் தேதி காலை 10 மணிக்குள் அலுவலகத்துக்கு வர வேண்டும். பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும். இவ்வாறு திருச்சி கால்நடை பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மைய தலைவர் ரிச்சர்டு ஜெகதீசன் தெரிவித்துள்ளார்.

## கோமாரி நோய் தடுப்பூசி முகாம்

திருத்துறைப்பூண்டி : திருவாரூர் மாவட்டம் திருத்துறைப்பூண்டி ஒன்றிய நகர பகுதியில் தமிழ்நாடு அரசு கால்நடை பராமரிப்புத் துறை மன்னார்குடி கோட்டம் சார்பில் 11வது சுற்று கோமாரி நோய் தடுப்பூசி முகாம் கடந்த 1ம் தேதி முதல் தொடங்கி நடந்து வருகிறது. 2ம் தேதி ராயநல்லூர், 3ம் தேதி வரம்பியம், பழையங்குடி, 5ம் தேதி எழிலூர் நுணாக்காடு ஆகிய பகுதிகளில் முகாம்

நடைபெற்றது. முகாமில் கால்நடை மருத்துவர் ராமலிங்கம் தலைமையில் உதவி மருத்துவர்கள் சுரேந்தர், காவியா, விஜேந்தர் கொண்ட மருத்துவ குழுவினர் கால்நடைகளுக்கு தடுப்பூசி போட்டனர். முகாமில் அந்தந்த ஊராட்சி மன்ற தலைவர்கள் கலந்து கொண்டனர்.

## திருத்துறைப்பூண்டி பகுதியில் நெல் நேரடி விதைப்பு பணி தீவிரம்

திருத்துறைப்பூண்டி : திருவாரூர் மாவட்டம் திருத்துறைப்பூண்டி பகுதியில் ஒவ்வொரு ஆண்டும் மேட்டூர் அணையிலிருந்து உரிய நேரத்தில் தண்ணீர் திறக்காததால் குறுவை சாகுபடி செய்வது கிடையாது. சம்பாவுக்கும் தண்ணீர் காலம் கடந்து திறக்கப்படும். இந்த ஆண்டு சம்பா சாகுபடிக்கு மேட்டூர் அணை திறப்பது குறித்து இது வரை தேதிஅறிவிப்பு இல்லை.

இந்நிலையில் திருத்துறைப்பூண்டி பகுதியில் நெல் நேரடி விதைப்பு பணிக்காக உழவு பணி முடிந்து 1 மாதம் ஆனது. தற்போது மேட்டூர் அணைக்கு தண்ணீர் வரத்து அதிகமாக உள்ளதால், இந்த மாதம் தண்ணீர் திறக்கப்படும் என்று தெரிகிறது. இதனால் நெல் நேரடி விதைப்பு பணியை தீவிரமாக விவசாயிகள் செய்து வருகின்றனர். திருத்துறைப்பூண்டி அருகே உள்ள நெடும்பலம் அரசு விதைப்பண்ணையில் 58 ஏக்கர் சாகுபடி நிலம் உள்ளது. இங்கு இரண்டாவது பருவ சம்பா சாகுபடிக்கு இயந்திர முறை நெல் நேரடி விதைப்பு பணியை மாவட்ட வேளாண்மை துறை இணை இயக்குனர் மயில்வாகனன், துணை இயக்குனர் மதியழகன் ஆகியோர் துவக்கி வைத்தனர்.

## நாட்டுக்கோழி பண்ணை அமைக்க விண்ணப்பம் வரவேற்பு கலெக்டர் நடராஜன் தகவல்

ராமநாதபுரம், : ராமநாதபுரம் மாவட்டத்தில் நாட்டுக்கோழி பண்ணை அமைக்க விண்ணப்பங்கள் வரவேற்க்கப்பட உள்ளதாக கலெக்டர் நடராஜன் தெரிவித்தார்.தமிழக அரசு கோழிப்பண்ணை தொழிலை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் 'கோழி அபிவிருத்தி திட்டத்தினை" ரூ.25.00 கோடி செலவில் 2016,-2017ம் ஆண்டிற்கு செயல்படுத்த ஆணை வழங்கியுள்ளது. இத்திட்டத்தின் மூலம் ராமநாதபுரம் மாவட்டத்திற்கு 140 அலகு நாட்டு கோழிப்பண்ணைகள் அமைக்க குறியீடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் விவசாயிகள், தனிநபர், தொழில் முனைவோர், சுய உதவிக்குழுக்கள் ஆகியோர், தேர்வு செய்யப்பட தகுதியானவர்கள். கோழிப்பண்ணை அமைக்க போதிய நிலம்

விண்ணப்பத்தாரர் பெயரிலோ அல்லது அவரது குடும்ப உறுப்பினர் பெயரிலோ இருத்தல் வேண்டும்.கோழி வளர்ப்பில் முன் அனுபவம் உள்ளவர்களும், கோழி வளர்ப்பில் ஆர்வம் உள்ள விவசாயிகளும் இத்திட்டத்தின் கீழ் பயன்பெறலாம்.

பயனாளிகள் தங்கள் சொந்த முதலீட்டில் அல்லது வங்கி மூலம் கடன் பெற்று இத்திட்டத்தின் மூலம் கோழிப்பண்ணை அமைக்கலாம். நாட்டுகோழிப்பண்ணை அமைப்பதற்கான கோழிக்கொட்டகை கட்டும் பணி, உபகரணங்கள், கோழித்தீவனம், கோழிக்குஞ்சுகள் வாங்குதல், அசோலா உற்பத்தி போன்றவை அமைக்க ஆகும் மொத்த செலவில், 25 சதவீதம் முன் மானியம் தமிழக அரசு வழங்குகிறது.

இதைத்தவிர, கோழி வளர்ப்பதற்கான தீவன செலவினை குறைப்பதற்கு 10 பயனாளிகள் கொண்ட சுய உதவிக்குழு ஒன்றுக்கு தலா ஒரு தீவன அரவை இயந்திரம் தமிழக அரசு வழங்கவுள்ளது.தேர்வு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு தமிழ்நாடு கால்நடை மருத்துவர் மற்றும் அறிவியல் பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கும் பயிற்சி மையங்களில் 3 நாட்களுக்கு முறையான பயிற்சி அளிக்கப்படும். மேற்கூறிய தகுதியும் ஆர்வமும் உள்ளவர்கள் வங்கியிலிருந்து ஒப்புதல் கடிதம் அல்லது சொந்த நிதிக்கான சான்றுடன் விண்ணப்பங்களை மண்டல இணை இயக்குநர், கால்நடை பராமரிப்புத்துறை, ராமநாதபுரம் உதவி இயக்குநர், கால்நடை பராமாரிப்புத்துறை, ராமநாதபுரம், பரமக்குடி ஆகியோரிடமிருந்து விண்ணப்பங்களை பெற்றுக்கொள்ளலாம் என கலெக்டர் நடராஜன் தெரிவித்தார்.

## அரசு மானியத்துடன் மாநில தீவன பயிர் அபிவிருத்தி திட்டம்

பால் உற்பத்தியை பெருக்குவதற்கு கறவை மாடுகளுக்கு தேவையான அளவு பசுந்தீவனம் வழங்குவது மிகவும் இன்றியமையாதது. கால்நடைகளுக்கான பசுந்தீவனத்தின் தேவைக்கும் உற்பத்திக்கும் இடையே மிகப்பெரிய இடைவெளி உள்ளது. பசுந்தீவன பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் வகையிலும் கால்நடை வளர்ப்போர் பசுந்தீவனத்தை உற்பத்தி செய்வதை ஊக்கப்படுத்தும் வகையிலும் தமிழக அரசு கடந்த ஐந்து ஆண்டுகளாக மாநில தீவன அபிவிருத்தி திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. விவசாயிகள் மற்றும் கால்நடை வளர்ப்போரின் வாழ்க்கை தரத்தினை மேம்படுத்துவம் நோக்கத்துடன் கால்நடை பராமாரிப்புத்துறையின் மூலம் நடப்பு (2016-17) நிதியாண்டில் அரசு மானியத்துடன் கூடிய பயிர் சாகுபடி திட்டங்கள் செயல்படுத்தப்படவுள்ளது.

இதில் பயன்பெற விருப்பமுள்ள கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் தங்கள் பகுதியிலுள்ள கால்நடை உதவி மருத்துவரை நேரில் தொடர்பு கொண்டு பயன்பெற விருப்பமுள்ள திட்டங்களை குறிப்பிட்டு எழுத்து மூலமாக விண்ணப்பம் அளித்திட கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். தமிழக அரசின் இலவச மாடுகள் மற்றும் ஆடுகள் பெறப்பட்ட நபர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். மேற்கண்ட அனைத்து திட்டங்களிலும் 30 சதவீதம் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின பயனாளிகள் தேர்வு செய்யப்படுவர்கள்.

**நுண்ணீர் பாசனத்திற்கு விண்ணப்பம்**

சிவகங்கை, : சிவகங்கை மாவட்டத்தில் சிறு குறு விவசாயிகள் நுண்ணீர் பாசனத்திற்கு விண்ணப்பிக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. மாவட்ட நிர்வாகம் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: நுண்ணீர் பாசன அமைப்புகள் 100 சதவீத மானியத்தில் எக்டேர் ஒன்றுக்கு அதிகபட்சமாக ரூ.1 லட்சம் வரை வழங்கப்படுகிறது. சிறு, குறு விவசாயிகளுக்கு காய்கறி பயிர்களுக்கு 2.5 ஏக்கர் மற்றும் இதர பயிர்களுக்கு 5 ஏக்கர் வரை இலவசமாக நுண்ணீர் பாசன அமைப்புகளை தங்கள் நிலங்களில் அமைத்துக் கொள்ளலாம். இதர விவசாயிகளுக்கு 75 சதவீத மானியத்தில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. நடப்பு ஆண்டில் தமிழ்நாட்டில் 46 ஆயிரத்து 99 எக்டேர் பரப்பில் நுண்ணீர் பாசனம் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

நடப்பு ஆண்டில் பொதுப்பிரிவு விவசாயிகளுக்கு ரூ.245.56 கோடி மானியம் ஒதுக்கப்பட்டுள்ளது. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி விவசாயிகள் இத்திட்டத்தில் பங்கேற்க முன்னுரிமை அளிக்கப்பட்டு இதற்காக ரூ.69.26 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. சிவகங்கை மாவட்டத்தில் 1097 ஏக்கர் பரப்பளவில் ரூ.301.95 லட்சம் மானியத்தில் செயல்படுத்தப்பட உள்ளது. முதலில் வருபவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

இத்திட்டத்தில் பங்கேற்க விரும்பும் விவசாயிகள் ரேஷன் அட்டை நகல், கிராம அடங்கல், கணினி சிட்டா, நில வரைபடம், சிறு, குறு விவசாயிகளாக இருப்பின் அதற்கான சான்று ஆகிய ஆவணங்களுடன் அருகில் இருக்கும் வட்டார தோட்டக்கலை உதவி இயக்குநர் மற்றும் வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தை அணுகலாம். கூடுதல் விபரங்களுக்கு 944209053, 9443495389 என்ற செல் எண்களில் தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு தெரிவிக்கப்பட்டள்ளது.

## தோவாளையில் பூக்கள் விலை குறைந்தது

ஆரல்வாய்மொழி: கேரளா மற்றும் கன்னியாகுமரி மாவட்டத்தில் ஓணப்பண்டிகை கொண்டாட்டங்கள் களை கட்டி வருகிறது.கேரளாவிற்கு பூக்கள் கன்னியாகுமரி மாவட்டத்தில் இருந்துதான் பெருமளவில் கொண்டு செல்லப்படுகிறது. இதனால் கடந்த சில நாட்களாக பூக்களின் விலை உயர்ந்து காணப்பட்டது. இந்நிலையில் பூக்களின் விலை நேற்று குறைந்திருந்தது. கேரளாவில் இன்றில் இருந்து தொடர்ந்து ஓண விடுமுறை என்பதால் பள்ளி கல்லூரிகள், அரசு அலுவலகங்களில் நேற்று அத்தப்பூ கோலமிட்டு ஓணம் கொண்டாடப்பட்டது.

இதனால் நேற்று முன்தினம் பூக்களின் தேவை அதிகரித்ததால் விலை உயர்ந்திருந்தது. இன்று பெரிய அளவில் கொண்டாட்டங்கள் இல்லை என்பதால் நேற்று பூக்களின் விலை குறைந்தது. இனி நாளை முதல் பூக்களின் விலை உயரத்தொடங்கும் என்று வியாபாரிகள் தெரிவித்தனர்.நேற்று முன்தினம் 400 ரூபாய்க்கு விற்கப்பட்ட மல்லிகைப்பூ நேற்று 300 ரூபாய்க்கு விற்கப்பட்டது, முல்லை ☐750ல் இருந்து ☐500, பிச்சி ☐750ல் இருந்து ☐ 500, தோவாளை அரளி ☐150ல் இருந்து ☐160, சேலம் அரளி ☐150 ல் இருந்து ☐120, மஞ்சள் கேந்தி ☐70, ஆரஞ்சு கேந்தி ☐ 100ல் இருந்து ☐ 80, வாடாமல்லி ☐120ல் இருந்து ☐50, சம்மங்கி ☐300ல் இருந்து ☐100ஆக குறைந்துள்ளது.

பட்டன் ரோஸ் ☐150ல் இருந்து ☐160, பாக்கெட் ரோஸ் ☐30ல் இருந்து ☐20, ஸ்டெம்ப் ரோஸ் ☐200ல் இருந்து ☐180, கோழிப்பூ ☐60ல் இருந்து ☐40, கொழுந்து ☐120ல் இருந்து ☐60, மரிக்கொழுந்து ☐180ல் இருந்து ☐100 ஆக குறைந்துள்ளது.